# மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

**MENMATHI KOVAI TAMIL MANDARM**

**INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS**

**Double-Blind Peer-Reviewed | Open Access**

**E-ISSN: 3049-3676 (ONLINE)**

Bimonthly | Online Publication | Tamil Language

**Published: 23.08.2026**

**Volume 9 | Issue 9 | July – August 2026**


# Birth and Death in Human Life

**Dr. M. Tamilvanan**

**Junior Research Officer**
**Central Institute of Classical Tamil**
**Chennai – 600 100**

**Abstract**

For every living being on Earth, death is an inevitable consequence of birth. Those who truly comprehend the nature of impermanence are liberated from the fear of death, recognizing it as a natural and simple occurrence. Thus, the great sage Valluvar, in the chapter titled 'Impermanence' (*Nilaiyamai*), counsels us never to fear death. Indeed, every day we live can be viewed as a weapon that shortens our lifespan. Such concepts regarding impermanence are frequently

encountered in classical Tamil literature. This article examines these ideas closely and aims to convey this wisdom to humanity.

**Keywords:** Transience of life in classical literature, Impermanence of youth, Impermanence of wealth, Impermanence of the body, Enduring in the world.

# மானிட வாழ்வில் பிறப்பும் இறப்பும்

**முனைவர் ம.தமிழ்வாணன்**

**இளநிலை ஆராய்ச்சி அலுவலர்**
**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
**சென்னை – 600100**

## ஆய்வுச் சுருக்கம்

புவியில் வாழும் ஒவ்வொரு உயிருக்கும் பிறப்பு ஒன்று நிகழ்ந்தால் இறப்பும் உறுதியாக நிகழும். மானிடத்தில் நிலையாமையை அறிந்தவருக்கு சாவு பயம் நீங்கிவிடும். சாவு வருதல் இயல்பானதும் எளிதானதும் ஆகும். ஆகவே சாவைக்கண்டு ஒருபோதும் அஞ்சாதே என்று வள்ளுவப் பெருமான் நிலையாமை என்னும் அதிகாரத்தின் வழி எடுத்துரைக்கிறார். ஆகவே நாம் வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் வாழ்நாளினை குறைக்கும் ஆயுதம் எனலாம். இவ்வாறு பல்வேறு நிலையாமை கருத்துகள் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் ஆங்காங்கே சுட்டக் காணலாம். அதனைக் கூர்ந்து நோக்கி மானிட சமுதாயத்திற்கே அறிவுறுத்தும் நோக்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** செவ்விலக்கியத்தில் நிலையற்ற வாழ்க்கை, இளமை நிலையற்றது, செல்வம் நிலையற்றது, உடல் நிலையற்றது, உலகில் நிலைபெறல்

## முன்னுரை

நாம் வாழும் பூலோகத்தில் பிறப்பு ஒன்று இருந்தால் அதனுடன் இறப்பு ஒன்றும் உறுதியாய் இருக்கின்றது. பிறப்பும், இறப்பும் வாழ்க்கையின் இரு பக்கங்களை உடையன. பிறப்பு மகிழ்ச்சியையும், இறப்பு துன்பத்தையும் கொடுக்க வல்லது. மனிதர்கள் எப்போதும் தன்னுடைய வாழ்வில் நிலைபெற்று இருப்பவர்கள் போன்று நடந்து கொள்கின்றனர். இவர்கள் உள்ளத்தில் நிலையாமை பற்றிய அறிவு இல்லாவிடில் அவர்கள் வாழ்வு மேன்மையுறாது. பிறவிப்பயன் என்பது ஒருவரது நம்பிக்கையும், ஒவ்வொருவரின் பார்வையையும் பொறுத்து வேறுபட்டு நிற்கின்றது. இந்த உலகில் “நாம் அடையும் மகிழ்ச்சியும் உண்மையானதல்ல, துன்பங்களும் உண்மையானதல்ல” என்கிறார் சுவாமி விவேகானந்தர். பழந்தமிழ் மக்கள் நிலையற்ற வாழ்வியல் பற்றிய கருத்துக்களைத் தமிழ்ச் செவ்விலக்கிய காலத்திலேயே பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து மானிட நிலையாமையைப் பற்றி இக்கால மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது நமது கடமையாகிறது.

**குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு** (**குறள்**.338)

“உடம்போடு உயிருக்கு உள்ள உறவு என்பது தானிருந்தக் கூடு தனியே இருக்க, அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது” என்றுரைக்கிறார் மு.வரதராசனார். தொல்காப்பியம், மதுரைக்காஞ்சி, பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய நூற்களில் காணப்படும் நிலையாமை குறித்த செய்திகளை நோக்கும்போது ஓர் தெளிவான புரிதலை ஏற்படுத்துகின்றது. பிற்காலத்தில் மாற்றம் பெற்று ‘யாக்கை நிலையில்லாதது, ஆகவே துறவு மேற்கொள்ளுங்கள்’ என அறநெறி

காலமாகிய பதினெண் கீழ்க்கணக்குக் காலத்தில் அறிவுறுத்தப்பட்டமையும் நோக்கத்தக்கது. வள்ளுவர், 'இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருதலைப் போன்றது, பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றது' என்று கூறி, ஓர் அழகான புரிதலை வழங்கி இருக்கிறார்.

"**உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு**" **(குறள்.339)**

## செவ்விலக்கியத்தில் நிலையற்ற வாழ்க்கை

பிறப்பும் இறப்பும் எங்கும் எப்பொழுதும் நிகழும். இந்நிலையாமை உணர்ச்சியானது அறிவாளர்களிடையே வேரூன்றியிருந்தது. ஒருவரது வாழ்நாளில் அவனது இளமை, செல்வம், உடல் (யாக்கை) ஆகியன நிலையற்றவை. மூப்பும் மரணமும் அடைதல் எல்லோருக்கும் ஒத்தது. இவற்றைப் பழந்தமிழ்ப் புலவர்கள் ஆங்காங்கே சுட்டிச் செல்கின்றனர்.

"**நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்**
**பெருமை உடைத்திவ் வுலகு**" **(குறள்.336)**

''............... **நாளும்**
**கனவுக் கழிந்தனை யவாகி, நனவின்**
**நாளது செலவும் மூப்பினது வரவும்**
**அரிதுபெறு சிறப்பின் காமத்து இயற்கையும்**
**இந்நிலை அறியாய்**!'' **(அகம்.353:2-6)**

''**விழுக்கடிப்பு அறைந்த முழுக்குரல் முரசம்**
**ஒழுக்குடை மருங்கின் ஒருமொழித்து ஆக**
**அரவுஎறி உருமின் உரறுபு சிலைப்ப**
**ஒருதாம் ஆகிய பெருமை யோரும்**
**தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே**'' **(புறம்.366:1-5)**

''**வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை**'' (**நற்**.314:1)

''**நாற்றம் சால்நளி பொய்கைஅடை முதிர்முகையிற்குக்**
**கூற்று ஊழ்போல் குறைபடூஉம் வாழ்நாள்**''

(**கலித்**.17:11-12)

"**நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்து**
**ஒன்றின ஒன்றின வல்லே செயின்செய்க;**
**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**
**வந்தது வந்தது கூற்று**." (**நாலடி**.4)

இவ்வாறு பல்வேறு இடங்களில் மனிதனின் வலி, துன்பம், பிற சோதனைகளின் போது நிலையற்ற தன்மை போன்றவற்றின் அனுபவத்தைப் பதிவிட்டுள்ளனர். மனித வாழ்வில் இளமை, செல்வம், உடல் ஆகியன எவ்வாறு நிலையற்ற தன்மையும் பாங்கும் உடையன என்பதைக் கீழே சுருக்கமாகக் காண்போம்.

## இளமை நிலையற்றது

பிறப்பித்த உயிரினம் அடுத்தடுத்த பருவமடைந்து மூப்புப்பெற்று இறத்தல் உறுதியானது. மனிதன் தன்னுடம்பில் இளமையும் வலிமையும் இருக்கின்றது என்பதற்காக மிகுந்த ஆட்டம் போடுகிறான். இம்மண்ணுலகத்தில் நேற்று இருந்தவன் இன்று இல்லாமல் போகிறான். இவ்வுலகம் நிலையாமை என்று சொல்லப்படும் நிலையற்ற தன்மைக்குப் பெயர்பெற்றது என்பதை மனம் உடனடியாக ஏற்றுகொள்வதில்லை. கலித்தொகைப் பாடல் இளமை நிலையற்ற பாங்குடையது என்பதை,

''**இளமையும் காமமும் நின்பாணி நில்லா**'' (**கலித்**.12:14)

என்னும் அடியின் வாயிலாக உணர்த்துகின்றது. "பழுத்தோலையைப் பார்த்துக் குருத்தோலைச் சிரித்ததாம்" என்பது பழமொழி.

முதுமையைப் பார்த்து ஏளனம் செய்பவர்கள் ஒருநாள் முதுமை அடைவது உறுதி. “**ஒருதலையா வந்துரூஉம் மூப்பும்**” (**திரி**.18:1) இன்றைக்கு இருக்கும் இளமை நாளை இல்லாமல் போகும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த இளமை காலத்தைப் பகுத்தறிந்தவர்கள், முதுமைப்பருவம் வருமென்று கருதி இளமைப் பருவத்திலேயே மனத்திலுள்ள பற்றுகளையும் ஆசைகளையும் துறந்தனர். இளமைப் பருவம் நிலைத்திருக்கும் என நினைத்தவர்கள் கோலூன்றி நடந்து துன்பத்தோடு வாழ்வர். இக்கூற்றை,

> “**நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்**
> **குழவியிடத்தே துறந்தார் புரைதீரா**
> **மன்னா இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி**
> **இன்னாங் கொழுந்திருப் பார்**” (**நாலடி**.11)

என்னும் பாடல் விளக்கி நிற்கின்றது. மேலும்,

> “**கடனிரை திரையிற் கருநரையோர்**”(**பரி**.1:42)

> “**பிறைநுதல் வண்ணம் காணாயோ நீ**
> **நரைமயிர் நிரைதோற் றகையின் றாயது**”
> (**மணி**.20.43-44)

> “**நரைமுது தாடி எயினார்**” (**சிலம்பு**.2.16)

என்னும் பாடல்களும் நரையைப் பற்றிப் பேசுகின்றன. தற்காலத்தில் நரையை மட்டுமே வைத்துக்கொண்டு முதுமையைக் கணிக்க இயலாது. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாகவும் சிறு குழந்தைகளுக்குக் கூட நரைமுடி இருப்பதைக் காண்கிறோம்.

> ”**தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா**
> **வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழ்இலா**
> **மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்**
> **அம்மனைக்கோல் ஆகிய ஞான்று**” (**நாலடி**.14)

என்னும் பாடலில், 'ஈர்க்கக்கூடிய அழகும் காலம் செல்லச்செல்ல மாறுபட்டு விடும். அதனால் இளமையில் மாறாத இன்பமளிக்கும் அறச்செயல்கள் செய்ய வேண்டும்' என்பதை வலியுறுத்தக் காண்கிறோம். இவ்வாறு மகளிரின் அறிவை மதிக்காமல் அவர்களின் இளமையும் அழகும் கண்டு மகிழ்பவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார் புலவர்.

**"பொய் அறியா, வாய்மொழியால்**
**புகழ் நிறைந்த, நல் மாந்தரொடு**
**நல் ஊழி அடிப் படர,**
**பல் வெள்ளம் மீக்கூற,**
**உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக!"** (**மதுரைக்.**19-23)

''**பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்**
**கரைபொருது இரங்கும் கனைஇரு முந்நீர்த்**
**திரையிடு மணலினும் பலரே உரைசெல**
**மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே**!''

(**மதுரைக்.**234-237)

இவ்விருவிடங்களும் வாழ்வில் இளமை நிலையற்றது என்பதை உணர்த்தும் சான்றுகளாக அமைந்துள்ளன.

## செல்வம் நிலையற்றது

செல்வம் என்பது கல்விச்செல்வம், மக்கட்செல்வம், பொருட்செல்வம் என்பதைக் குறிக்கும். இங்குப் பொருள்செல்வத்தைப் பற்றியே பேசுகிறோம். ஒருவன் பொருளைச் சேர்க்கக் கருதிப் பல்லாயிரம் கோடியைச் சேர்த்து வைத்து மகிழ்ந்து நிற்கின்றான். அவன் இறந்து போகும்போது அவனால் பொன்னோ, பொருளோ, பணமோ போன்ற எதையும் எடுத்துச் செல்லமுடிவதில்லை. பெரும் செல்வந்தர் ஒருவர் தன்னிடம் உள்ள செல்வங்கள் அனைத்தும்

நிலையானவை என்று நினைத்தால், பின்னொரு காலத்தில் அச்செல்வங்கள் அனைத்தும் இழந்து வறியவராய் நிற்பார் என்கிறார் வள்ளுவர். செல்வம் சிறிதும் நிலைத்த பொருள் எனக் கருதுதல் மூடத்தனம் என்றும் உரைக்கின்றார்.

"**நில்லாத வற்றை நிலையின என்றுணரும்**
**புல்லறி வாண்மை கடை**" (**குறள்**.331)

இன்றைய சூழலில் செல்வம் ஒரு மனிதனின் மரியாதையாகக் கருதப்படுகிறது. பொதுவாக எவ்வளவுதான் கல்விச் செல்வம் உட்பட பல செல்வங்கள் கூடி இருந்தாலும் பொருள்செல்வத்தையே மிகப்பெரிதாகக் கருதுகின்றனர். வள்ளுவர், 'பெருஞ்செல்வம் வருவது கூத்தாடும் அரங்கத்தில் சேருகின்ற கூட்டத்தைப் போன்றது. அச்செல்வம் போவதும் கூத்து முடிந்ததும் அக்கூட்டம் கலைந்து போவதைப் போலும்' எனச் சாடுகின்றார்.

''**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளித் தற்று**'' (**குறள்**.332)

ஓர் இல்லத்தில் சமைத்த அறுசுவை உணவுகள் ஒரு பக்கம். அவ்வுணவினை ஊட்ட அன்பு மனைவி அவன் பக்கம். கணவனோ எதை உண்ணுவது என்று தெரியாமல் ஒவ்வொன்றிலும் ஒரு பிடி அளவே உண்ணும் செல்வந்தன். இத்தகைய செல்வச் செழிப்பில் இருப்பவனும் ஒருநாள் அனைத்துச் செல்வங்களையும் இழக்கக் கூடும். அத்துடன் நில்லாமல் தனக்குத் தேவையான அற்பமான கூழையும் பிறரிடம் வேண்டி இரந்து நிற்கும் நிலையை அடையலாம் என்ற கருத்தமைந்த பாடலொன்று செல்வம் நிலையாமையை விளக்குகின்றது.

**அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட**
**மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்**

**சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின், செல்வம் ஒன்று**
**உண்டாக வைக்கற்பாற் றன்று.** (நாலடி.1)

மற்றொரு பாடல் (நாலடியாரின் 2ஆவது பாடல்), செல்வமானது, வண்டியின் உருளைப் போன்று யார் மாட்டும் நில்லாது சென்று கொண்டே இருக்கும் என்று செல்வத்தின் நிலையாமைத் தன்மையைச் சொல்கிறது. பெருஞ்செல்வம் சேர்த்திருக்கிறோம் என்று சிலர் அறியாமையினால் செருக்குற்றுத் திரிவர். அவர்கள் வருந்தும்படி செல்வம் அவர்களை விட்டு நீங்கும். எப்படித் தெரியுமா? இவர்கள் செல்வந்தர்களாய் இருந்தார்கள் என்ற அடையாளம் கூட இல்லாதவாறு நீங்குமாம். இரவில் கரியமேகம் வெளிப்படுத்திய மின்னல், தோன்றிய வேகத்தில் சுவடில்லாமல் அழியும். அடையாளமில்லாமல் அழிந்து போகும். அதுபோல செல்வமும் அழிந்து போகும். இக்கருத்தை நாலடியாரின் 8ஆவது பாடல் எடுத்துரைக்கின்றது. ஆகவே "செல்வம் வைத்து இருக்கின்ற காலத்திலேயே விரைந்து அறம் செய்திடுக" என்று வலியுறுத்தப்படுகிறது.

தேனீக்கள் மலர்தோறும் தேனெடுத்துக் கூடுகளில் தேனைச் சேகரிக்கின்றன. ஆனால் அந்தத் தேனைத் தேனீக்கள் அனுபவிக்கின்றனவா? இல்லையே. தேனை யாரோ எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். தேனீக்கள் தேனை இழக்கின்றன. அதுபோல் பொருளைத் தேடி வைத்தவர்கள் செல்வத்தின் நிலையாமைப் பண்பின் காரணமாகச் செல்வத்தை இழக்கிறார்கள். செல்வம் இருந்த காலத்தில் இவர்கள் நல்ல அறம் செய்யவில்லை. இல்லாதவர்களுக்குக் கொடுக்கவில்லை. செல்வம் இழந்த நிலையில் அவர்களும் அனுபவிக்க இயலாது.

**"உடாஅதும் உண்ணாஅதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி"** (நாலடி.10)

இப்பாட்டில் தேனீக்கள் தேன் சேகரித்து இழக்கும் செயலைச் சான்றாகக் காட்டி விரைந்து அறம் செய்வதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. புறநானூற்றின் 360 ஆவது பாடலில் தந்து மாறனுக்கு சங்க வருணரென்னும் நாகரையர் எடுத்துரைத்து "செல்வத்துப் பயன் ஈதலே" என்பதை அறிவுறுத்தியுள்ளார்.

வாழ்நாளை வளமாக்கும் பொன்னோ, பொருளோ எல்லோருக்கும் ஒரேவாறு கிட்டுவது இல்லை. அவ்வாறு கிட்டிய பொருள் நிலையாக இருப்பதும் இல்லை. அது மாறிமாறி உறழ்ந்து கொண்டேயிருக்கும். செல்வத்தின் நிலைத்தன்மை இன்மைக்குக் காரணம் எதுவாயினும், மதுரைக்காஞ்சியில் பாண்டியனின் பெருமை கூறும் இடத்து, பகைவரின் செல்வங்கள் போரினால் அழிந்துபட்ட நிலையை மதுரைக்காஞ்சியின் 152 - 158, 167 - 168 ஆம் அடிகளில் காணலாம். இன்னொரு பாட்டில், பாண்டியன் தன்னைப் பணிந்தவர் தம் நிழல் வாழ்ந்தனர் என்றும் பணியாதாரிடத்துப் போரிட்டு அடிபணியச் செய்து அவர்தம் செல்வத்தினைத் திறையாகப் பெற்றார் என்று மாங்குடி மருதனார் பதிவிட்டுள்ளார்.

தொல்தமிழர் செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து செல்வம் நிலையில்லாமல் சக்கரம் போல் சுழலும் தன்மையது என்றும் கூறுவராயினர். பரத்தை வழிச் சேரலிலும் செல்வம் நிலையற்றதாகும் என்பதை மதுரைக்காஞ்சியின் 567-577ஆம் அடிகள் உணர்த்துகின்றன.

இளங்கோவடிகள் செல்வர்கள் சேர்ந்து பிரிந்தநிலைப் பற்றிக் கோவலன் வழியாகச் சொல்வதும் நோக்கத்தக்கது.

''**தன்பைந்தொடி**
**வாடியமேனி வருத்தம் கண்டு, ''யாவும்**
**சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்**
**குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த**
**இலம்பாடு நாணுத்தரும் எனக்கு' என்ன**''

(**சிலம்பு. கனாத்திறம் உரைத்த காதை** 68 - 71)

இப்பாடல், பொருள்செல்வம் தொலைந்து போயின எனச் சொல்வதால் செல்வத்தின் நிலையாமை தீயொழுக்கத்தின் வாயிலாகவும் உண்டு என்பதை உணர்த்துகிறார். ஒருவரின் வாழ்நாளை வளமாக்கும் பொருளோ எல்லோருக்கும் ஒரு வழியாகக் கிட்டுவதும் இல்லை. கிட்டிய பொருள் தானும் நிலையாக இருப்பதுமில்லை. அப்பொருள் மாறிமாறி சென்று கொண்டேயிருக்கும். இக்கருத்தைக் கலித்தொகைப் பாடல் சுட்டக் காணலாம்.

''**கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்**
**பழவினை மருங்கின் பெயர்பு உறையும்**''

(**கலித்**.21 :10-11)

## உடல் நிலையற்றது

நம்முன்னோர் மண்ணுலகில் பிறப்பினால் வந்த உடம்பு, இறப்பினால் அழிந்து போய்விடுதல் இயல்பு. நாம் துன்புறும் நாட்கள் வரும் முன்பே, நற்செயல்களைப் புரிய வேண்டும். நற்செயல் புரிவதற்குத் துறவு நெறியே சிறந்தது என்றும் கருதியுள்ளனர். தொல்காப்பியர், இறக்கும் முன் இல்லறம் கொண்டு துறவறம் காண அழைப்பதைக் காண்கின்றோம்.

''**காமம் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே**'' (**தொல்.கற்பு.**51)

பிறந்தவர் யாவரும் ஒருநாள் இறந்துதான் ஆக வேண்டும். ஒருநாள் கழிந்தது என்றால் வாழ்நாளின் ஒருபகுதி குறைந்தது என்று பொருள். கூற்றுவன் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்நாளையும் ஒவ்வொரு நாளாக அளந்து கணக்கிடுவதாக நம்புகிறோம். இச்செய்தியைத் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கூற்றின் வாயிலாக அறியலாம்.

"**நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்**" (**குறள்.**334)

மக்கள் வழக்கில் பேசும்போது, "உறங்கியவர் விழித்தாலே உண்டு. இன்றிருப்பார் நாளையில்லை. நேற்றுப் பார்த்தேன், சற்றுமுன் அவருடன் பேசிக்கொண்டிருந்தேன், விடியலில் கண்டேன், சிறு வயதிலேயே இறந்துவிட்டான்" என்று சொல்லக் காண்கிறோம். நாலடியார், 'மனித வாழ்க்கையானது புல்லின் நுனிமேல் இருக்கும் பனித்துளியைப் போன்றது' எனக் கருதி இப்போதே அறச்செயல்களைச் செய்ய வேண்டும்' என்கிறது.

"**புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்த அறிவினை - இன்னினியே**
**நின்றான் இருந்தான் கிடந்தான் கேள் அலறச்**
**சென்றான் எனப்படுத லால்**" (**நாலடி.**29)

இப்பாடல், "இப்பூவுலகில் நிலைப்பார் எவருமிலர். அதனால் இறப்பு என்பது எப்போது நிகழும் என்பதை எவரும் அறிய முடியாது.

எனவே உடனடியாக அறம் செய்ய வேண்டும்” என்று அறிவுறுத்துதைக் காண்கிறோம்.

“**பிறப்பாரும் சாவாரும் என்றும் உளர்**” (**நான்மணி.57**)

காலக்கணக்கின் அளவாக இருக்கும் நாள் தொடங்குவதற்கு அடையாளமாகக் கதிரவனின் உதயம் அமைவதால், அந்த உதயம் வாழ்நாளின் அலகாகக் கருதப்பட்டது. கதிரவனின் உதயம் நாள்தோறும் நடப்பதால், நாம் வாழ்ந்த நாட்கள் கூடிக்கொண்டே உள்ளது. வாழக்கூடிய அதிகப்படியான நாட்களைக் கொண்டு, நிலையாக உயிருடன் வாழ்ந்தவர் என்று ஒருவருமில்லை. அதனால் வாழ்நாள் முடியும் முன்னரே நாம் மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ்வோம் என்பதை நாலடியார் உணர்த்துகிறது.

“**வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால் - வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின்; யாரும்
நிலவார் நிலமிசை மேல்**.” (**நாலடி.**22)

அனைவருக்கும் இறப்பு வருதல் உறுதியானது. அதனை இயக்கும் எமதர்மன் சிறிதும் காலம் தாழ்த்தாமல் தன்கடமையைச் செய்து விடுவான். இளமை கழிந்து மூப்பும் இறப்பும் வரும் முன்பே நல்லறம் செய்துவிட வேண்டும் என்பதைப் புறநானூற்றின் 363ஆம் பாடல் சொல்லக் காண்கிறோம். பொருநராற்றுப்படையில், தவம் இயற்றியோர் உரிய காலத்தில் தம் உடம்பை விடுத்து உயர்ந்த உலகாகிய வீடுபேறு இன்பத்தையும் அடைவர் என்பதைக் கூறுகிறது.

‘‘**தவம்செய் மாக்கள்தம் உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான**’’ (**பொருநர்.91-92**)

கணிமேதாவியாரின் ஏலாதியில் 21, 26 ஆம் பாடல்களும் உடல் நிலையாமையை உணர்த்தவல்லது. திருக்குறள் 340ஆம் பாடல், “உடலுடன் தங்கியுள்ள உயிருக்கு நிலையாகப் புகுந்து தங்குதற்கு ஒரு இல்லம் அமைந்திடவில்லையே. ஐயோ!” என்று புலவர் எல்லோருடைய ஏக்கத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்.

## உலகில் நிலைபெறல்

மேற்கூறிய செய்திகளால் பூலோக வாழ்வில் இளமை, செல்வம், உடல் ஆகியவை நிலையற்றது என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறிந்தோம். சிலர் இயற்கை நிலையானது என்று நம்புகின்றனர். ஆனால் காலநிலை, இயற்கை சீற்றம், போர், கனிமங்கள் எடுப்பு, மலை மற்றும் காடுகள் அழிப்புப் போன்றவற்றால் இயற்கையும் நிலையற்றதாகவே போய்விடுகிறது. இதனைத் தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து இருந்ததைச் சான்றுகள் வழி அறிகிறோம்.

”**நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வார்ப் பெறின்**” (**குறள்**.334)

நாம் வாழும்வரை உடல்நலம் பேணுதல், இயற்கையை மீட்டெடுத்தல், தொழில்துறையை மேம்படுத்துதல்: நிலையான பொருளாதாரத்தை உருவாக்குதல் போன்றவை அடுத்த தலைமுறைக்கும் நன்மை தருவதாக அமையும்.

இப்பரந்த பூலோகத்தில் நம்மைச்சுற்றி உள்ள அனைத்துமே இயற்கை அன்னையின் படைப்பாகும். இந்தப் புவியில் பிறப்பு எடுத்தமையால் தாவரங்கள், விலங்குகள், வாயு மண்டலம், நீர் மண்டலம், தரை மண்டலம், காலநிலை போன்ற அனைத்தையும்

அனுபவிக்கின்றோம். இயற்கை நம் வாழ்வின் ஆதாரமாகிப் போனது என்பதனை வள்ளுவர்,

“**விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே**
**பசும்புல் தலைகாண்பு அரிது**” (**குறள்**.16)

என்று சொல்கிறார். கடல் தாயின் மடியில் கண் விழிக்கும் காலைக் கதிரவன், மனதை மயக்கும் தண்மையான சந்திரன், அகன்று விரிந்த ஆகாயம், மழைத் துளியாய் மண்ணில் விழுந்து கடலாய் மாறிய நீர், காதோடு கவிபாடும் பறவைகளின் இசையுடன் கூடிய உன்னத காலைப் பொழுது, அழகிய வானவில் காட்டும் வண்ணங்கள், வீசும் இளம் தென்றல், கண்ணுக்குக் குளிர்ச்சியான பச்சை வண்ணக் காடுகள், எங்கும் எழில் கொஞ்சும் இயற்கை என வாழ்ந்துவிட்டு மடியத்தான் செய்கிறோம். அருணகிரிநாதர் எழுதிய கந்தர் அலங்காரத்தில்,

“**வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி**
**வறிஞர்க்கென்றும்**
**நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்கன்**
**வெய்யிற் கொதுங்க வுதவா உடம்பின் வெறுநிழல்போல்**
**கையிற் பொருளும் உதவாது காணுங் கடை வழக்கே**”

என்னும் பாடல், ‘வெய்யிலுக்கு ஒதுங்கி நிற்கக்கூட உதவாதப் பயனற்ற இந்த உடலின் நிழலைப் போன்றே நம்முடைய கைப்பொருள் (செல்வம்) இறக்கும் தருவாயில் நமக்கு ஒருவகையிலும் பயன்படாது’ என்கிறது. அதனை உணர்ந்து இறைவழியும் ஈகை வழியும் நாடுதல் வேண்டும் என்று அறிவுறுத்துவது ஏற்கத் தக்க செய்தியாக உள்ளது.

## முடிவுரை

மனிதர்கள் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை, பதவியாசை, புகழாசை என்னும் ஐந்தாசைகளால் கட்டுண்டு கிடக்கிறார்கள். சிலபேர் அரிய பிறப்பில் பெரிய குற்றம் செய்து (கொலை, கொள்ளை, கற்பழிப்பு, அடிதடி போன்ற செயல்களில் ஈடுபட்டு) மகிழ்ச்சியை இழக்கின்றனர். மக்களுள் சிலர் வாழ்க்கையில் ஏற்படும் துன்பத்தை எதிர்கொள்ளத் தெரியாமல் தன்னுயிரை மாய்த்துக் கொள்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆகவே மண்ணுலகில் பிறந்தவருக்கு இறந்து உடலழிவது உறுதியாகிறது. அதற்குள் உலகில் நிலைபெற வேண்டுமெனில் வாழுங்காலத்தில், நற்செயல்களைச் செய்து இன்புறல் வேண்டும்.

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"** (குறள்.231)

வாழ்க்கைச் சுவடுகளில் ஒருவரது புகழ் நிலைக்க வேண்டுமானால், மக்கள் மனதில் நல்ல எண்ணங்களை விதைக்க வேண்டும். பிறருக்கு உதவும் வகையில் உழைக்க வேண்டும், நேர்மையுடன் இருக்க வேண்டும். அனைவருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்க வேண்டும். பிறப்பித்த மானிடராகிய நாம், ஒவ்வொருவரும் நிலையாமையை உணர்ந்து வாழ்கின்றபோதே சூழ்ச்சி, ஊழல், கொலை, கொள்ளை, ஏமாற்றுதல், துரோகம் போன்றவற்றைத் தவிர்த்து அறத்தொடு தோய்ந்து, சுற்றமொடு வேய்ந்து, கிடைத்ததைப் பகிர்ந்து, இன்பத்தில் ஆழ்ந்து நீடூஉழி நிலைபெறுவோம்.

**"நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால்**
**இறப்பு ஒரு சரித்திரமாக இருக்க வேண்டும்"**

**(ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்)**

## துணைநூற் பட்டியல்

1.சாமிநாதையர்.உ.வே.(ப.ஆ) 1920, சிலப்பதிகார மூலமும் அரும்பத உரையும் அடியார்க்கு நல்லார் உரை.

2.வையாபுரிப்பிள்ளை, ச. (பதிப்பு), 1967, சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், பாரிநிலையம், பிராட்வே, சென்னை.

3.சுப்பிரமணியன்.ச.வே.(ப.ஆ.), 2008, தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம் முழுவதும், மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை சென்னை

4. கிருட்டினமூர்த்தி, சா., (ப.ஆ.), 2004, இக்கால உலகிற்குத் திருக்குறள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 3 தொகுதிகள்.

5.சாமிநாதையர்.உ.வே., 1961, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கியருரையும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.